
# உடன்பிறப்பே... 93

**நீரை.மகேந்திரன்**

தி.மு.கழக வரலாற்றில் இடம் பிடித்த தீரர்களை வாராவாரம் இங்கு நினைவுகூர்ந்து வருகிறோம். அந்த வகையில், பெரியாரின் தொண்டராக, அண்ணாவின் தம்பியாக, கலைஞரின் உடன்பிறப்பாகப் பயணித்து, கழகம் வளர்த்த வை.இரத்தினவேலு அவர்களின் வரலாற்றினைப் பார்க்கலாம்.



# வை.இரத்தினவேலு
# அண்ணாவின் கோரிக்கையும் கலைஞரின் அன்பும்!

1951-ஆம் ஆண்டு, இன்றைய மயிலாடுதுறை நகரில், அன்றைய ஒருங்கிணைந்த தஞ்சை மாவட்டக் கழகத்தின் மாநாடு நடைபெற்றது. அங்கு சொற்பொழிவாற்றிய பேரறிஞர் அண்ணா, தமிழ்நாட்டின் மூலை முடுக்குகள் எங்கும் கருப்பு, சிவப்பு இரு வண்ணக்கொடி பறக்க வேண்டும் என முழங்கினார். கூடவே, “குடிசை உருவத்திலாவது நமக்கு ஒவ்வொரு ஊரிலும் ஒரு இடம் தேவை. அப்படி ஆயிரம் கட்டடங்களின் சாவிகள் இருக்க வேண்டும். அந்தச் சாவிக் கொத்துடன் நான் சுற்றுப்பயணம் செய்ய வேண்டும். எந்த ஊருக்குச் சென்றாலும், எந்த நேரத்துக்குச் சென்றாலும், அந்தக் கட்டடத்தை நானே திறந்து இளைப்பாறுவதற்கு என் கையிலே அந்தச் சாவிக்கொத்து இருக்க வேண்டும்'' என தன் விருப்பத்தையும் வெளிப்படுத்தி இருப்பார்.

பேரறிஞர் அண்ணாவின் அந்த ஆசையை கரூர் நகரில் ஒரு பொதுக்கூட்டத்தில் கலைஞர் தெரிவிக்க, அந்தக் கூட்டத்தை ஏற்பாடு செய்த கரூர் ஒன்றியக் கழகப் பொறுப்பாளர், அந்த மேடையிலேயே, “நான் இடம் தருகிறேன்” என்று வாக்குறுதி அளித்து, கரூர், காவேரி திரை அரங்கத்தை ஒட்டிய தனது நிலத்தைக் கழகத்துக்குப் பதிவுசெய்து அந்தப் பத்திரத்தை தலைமைக் கழகத்திற்கு அனுப்பி வைத்தார். 1987-ஆம் ஆண்டில், அந்த இடத்தில் கழகத்துக்குச் சொந்த கட்டடம் கட்டப்பட்டு, அதனைத் திறந்தும் வைத்தார் முத்தமிழறிஞர் கலைஞர். அந்தக் கட்டடம் இன்றும் கரூரில் கழகத்தின் அலுவலகம்.

அண்ணாவின் கனவை, கலைஞரின் விருப்பத்தை நிறைவேற்றிய அந்த உடன்பிறப்பு வை.இரத்தினவேலு. “கல்லூரி மாணவராயிருக்கும் போதே கழகக் காளை - அறிவுப் பாசறையில் பெற்ற அனுபவங்களையும், ஆர்வத்தால் எழுந்த எண்ணங்களையும் ஒன்றாக்கி, கழகப் பணியைத் தீவிரமாகச் செய்து வருபவர்” என முத்தமிழறிஞரால் பாராட்டுப் பெற்ற உடன்பிறப்பு. கரூர் கழகத்தினர் சுருக்கமாக ‘வை.ரா.’ அல்லது ‘வி.ஆர்.’ என்று அழைப்பதென்பது அவரின் அடையாளம்.

### அண்ணாமலை பல்கலை. மாணவர்

அன்றைய ஒருங்கிணைந்த திருச்சி மாவட்டம், இன்றைய கரூர் மாவட்டம், புகழூர் அருகில் உள்ள வேலாயுதம்பாளையம் கிராமத்தில் 1925-ஆம் ஆண்டு மார்ச் 21-ஆம் தேதி பிறந்தவர் இரத்தினவேலு. பெற்றோர் வைரவேல் - காவேரியம்மாள்.

ஆரம்பப் பள்ளிப்படிப்பை உள்ளூரிலும், உயர்நிலைக் கல்வியை, பரமத்தி அருகே உள்ள கந்தசாமி கவுண்டர் பள்ளியிலும் பயின்றார். உயர்நிலைப் பள்ளியில் இவருக்குத் தமிழாசிரியராக இருந்தவர் பெரியார் பற்றாளர் புலவர் வை.பொன்னம்பலனார் அவர்கள். அவர் காட்டிய வழியில் பகுத்தறிவு-முற்போக்குச் சிந்தனை கொண்டவராக மாற்றம் அடைந்தார் இரத்தினவேலு. பின்னர், திராவிட இயக்கப் பாசறை எனப் போற்றப்பட்ட அண்ணாமலை பல்கலைக்கழகத்துக்குப் படிக்க வந்தபோது, அங்கு இனமான பேராசிரியர், மதியழகன், நாவலர், இளம்வழுதி ஆகியோரின் நட்பு கிடைத்து, தீவிர களப்பணியாளராக மாறினார்.

அண்ணாமலை பல்கலைக்கழகத்தின் களப் போராட்டங்களில் பேராசிரியர் மற்றும் கழக முன்னோடிகளுடன் இணைந்து இரத்தினவேலுவும் பங்கெடுத்த நிகழ்வுகளை பேராசிரியர் அவர்களும் நினைவுகூர்ந்துள்ளார்.

### ஊருக்கு ஊர் கழகக் கொடி

குடும்பப் பொறுப்பு காரணமாக, கல்லூரிப் படிப்பைப் பாதியில் நிறுத்திக் கொண்டாலும், கரூரில் கழகப் பொறுப்பு அவரை அழைத்துக் கொண்டது. புகழூரில் கிளைக் கழகத்தைத் தொடங்கி கழகக் கொடி ஏற்றியவர், அந்தச் சுற்றுவட்டாரத்தில் தவிட்டுப்பாளையம் முதல் கரூர் வரை, ஒவ்வொரு கிராமமாக கழகத்தின் கொடியை பட்டொளி வீசிப் பறக்கச் செய்தார். அப்பகுதியில் பெரும்பான்மையாக வசிக்கும் மக்கள் முதல், சிறுபான்மையினர், பட்டியலின மக்கள் என அனைவரையும் கழகத்தில் இணைக்கும் பணியைச் செய்தவர்.

பேரறிஞர் அண்ணா மீது பற்றுகொண்ட வை.ரா, அண்ணாவை கரூர் அழைத்துவந்து கழகக் கூட்டங்களை மாநாடு போல் நடத்தி இருக்கிறார். 1950-ஆம் ஆண்டுவாக்கில் கழகத்துக்கு என ‘மாலைமணி’ பத்திரிகை தொடங்கப்பட்டபோது, அண்ணா தனது தம்பிகளுக்கு கடிதம் எழுதினார். அதில், ‘மாலைமணி’ ஏட்டுக்கு ஒரு பங்கு ஆயிரம் ரூபாய் வீதம், குறைந்தபட்சம் 2 பங்குகளாவது வாங்க வேண்டும்’ என்கிற அன்புக் கோரிக்கையைத் தட்டாது ஏற்றுக்கொண்டு, அன்றைய தேதியில் இரண்டாயிரம் ரூபாய் அனுப்பியவர் இரத்தினவேலு.

**‘ஊருக்கு ஊர் கழகக்கொடி பறக்க வேண்டும் என அண்ணா சொன்னதற்கும், ஊருக்கு ஊர் இரத்தினவேலு வேண்டும்’ என கலைஞர் கூறியதற்குமான காலத்தை, காரணத்தை அறிந்துகொண்டால், இளையோரின் கழகப் பிடிப்பு இன்னும் பலம்பெறும்!**

அன்றைக்குக் கொண்டிருந்த அதே கழகப் பற்றுதான், 1987-ஆம் ஆண்டில் கழகத்துக்கு நிலம் அளிக்கும்போதும் வெளிப்பட்டது. “நமது இயக்கத்திற்கென்று ஒரு அலுவலகம் வேண்டும். நமது கண்மணிகள் டீக் கடையிலும், சிகை அலங்காரக் கூடங்களிலும்தான் கழகப் பிரச்சாரம் செய்து வருகிறார்கள். அவர்கள் ஒன்றுகூட ஒரு இடமும், கட்டடமும் தேவை” என கலைஞர் கூற, அப்போதே “நான் இடம் தருகிறேன்” என்று எந்த எதிர்பார்ப்பும் இல்லாமல் முன்வந்தவர் ‘வை.ரா’ என இன்றைக்கும் கழகத்தினர் அவரது பண்பினை வியக்கின்றனர்.

1960-களில் சம்பத் அவர்கள் கழகத்தில் இருந்து வெளியேறியபோது, “அண்ணா கரூர் வந்து அரசியல் செய்ய முடியுமா?” என சிலர் சவால் விட்டபோது, அந்தச் சவாலை ஏற்று கரூர் வேலாயுதம்பாளையத்தில் அறிஞர் அண்ணா தலைமையில் மாபெரும் ஊர்வலமும், பொதுக் கூட்டமும் நடத்திக் காட்டியவர் வை.ரா.

### கடுங்காவல் கைதியாக

பொதுக்கூட்டம் நடத்துவது, பொருளுதவி அளிப்பதோடு அவர் தனது ஆற்றலைச் சுருக்கிக் கொள்ளவில்லை. கல்லக்குடிப் போராட்டத்தின் போது, புகழூர் ரயில் நிலையத்தில் வை.ரா தலைமையில் மறியல் போராட்டம் நடை பெற்றது. அப்போது காவல் துறையினரால் துப்பாக்கிக் கட்டையால் தாக்கப்பட்டுள்ள விவரத்தைக் குறிப்புகள் சொல்கின்றன.

விலைவாசி உயர்வுப் போராட்டத்தின்போது கைது செய்யப்பட்டு திருச்சி மத்திய சிறையில் அடைக்கப்பட்டார். அங்கு சக கைதியாக கலைஞரும் அடைக்கப்பட்டிருந்தார். கலைஞர் அந்த நினைவுகளைப் பகிர்ந்துள்ள **‘ஆறு மாத கடுங்காவல்’** என்ற நூலில் “இயக்கத்திற்கு ஊருக்கொரு இரத்தினவேல் போல் வேண்டும்” என்று பெருமையோடு குறிப்பிட்டுள்ளார்.

### பொறுப்புகளில் கண்ணியம்

புகழூர் கிளைக் கழகத்தில் தொடங்கிய அவரது பயணம், கரூர் ஒன்றிய கழகப் பொறுப்பாளர் உள்பட கழகப் பொறுப்புகளையும், திருச்சிராப்பள்ளி மத்திய கூட்டுறவு வங்கிப் பெருந்தலைவர் என அரசு பொறுப்புகளிலும் சிறப்பாகச் செயல்பட்டு, கழகத்தின் கடமை, கண்ணியம், கட்டுப்பாடு காத்தவர் என பெயர் பெறச் செய்தது.

புகழூர் செய்தித்தாள் மற்றும் காகித ஆலை ஒப்பந்தத் தொழிலாளர்கள் முன்னேற்ற சங்கத் தலைவராக இருந்தபோது, ‘தினசரி கூலி வேலைகளில் இருப்பவர்களை நிரந்தரமாக்கவும், பணியை வரன்முறைப்படுத்தவும், நிரந்தர தொழிலாளர்களுக்கு நிகராக ஊதியம், சீருடை ஆகியவை கிடைக்கப் பாடுபட்டு, அதில் வெற்றியும் பெற்றவர்’ என்கின்றனர் கரூர் கழகத்தினர்.


தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கி இயக்குநர், மோகனூர் சர்க்கரை ஆலை இயக்குநர், திருச்சிராப்பள்ளி மாவட்டக் கூட்டுறவு பால்பண்ணை இயக்குநர் எனப் பல முக்கிய பொறுப்புகளிலும் இவரது செயல்கள் இன்றும் கழகத்துக்கு நற்பெயர் தாங்கி நிற்பவை.

தனது சிறைச்சாலை சகாவான வை.ரா மீது கலைஞர் கொண்டிருந்த அன்புக்குச் சான்றாக இந்தப் பொறுப்புகள் அமைந்தன. அதேநேரத்தில் கொள்கையில் அவர் கொண்டிருந்த உறுதிக்குச் சான்றாக 2002-ஆம் ஆண்டு கழக முப்பெரும் விழா விருதுகளில் ’பெரியார் விருது’ அளித்துச் சிறப்பித்தார் கழகத் தலைவர் முத்தமிழறிஞர் அவர்கள்.

அறுபது ஆண்டுகளுக்கு மேல் மாறாத உறுதியுடன் கழகப் பணியில் இளையோருடன் இணைந்து, துடிப்புடன் செயல்பட்டு வந்த வை.ரா, 2011-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 22-ஆம் தேதி, தனது 86-வது வயதில் இயக்கத்தை நிறுத்திக் கொண்டார். ‘ஊருக்கு ஊர் கழகக் கொடி பறக்க வேண்டும் என அண்ணா சொன்னதற்கும், ஊருக்கு ஊர் இரத்தினவேலு வேண்டும்’ என கலைஞர் கூறியதற்குமான காலத்தை, காரணத்தை அறிந்து கொண்டால், இளையோரின் கழகப் பிடிப்பு இன்னும் பலம்பெறும்!

**...துடிக்கும்**

## மீண்டும் ‘திராவிட வாசிப்பு மின்னிதழ்’!




திராவிட இயக்க வரலாற்றினை இளையோரிடம் கொண்டு சேர்க்கும் விதமாகக் கடந்த இரு ஆண்டுகளுக்கு முன், ‘திராவிட வாசிப்பு’ என்கிற மின்னிதழ் பரவலாக கவனம் பெற்றது. இந்த வாசிப்பு இயக்கத்தை நடத்தி வந்த குழுவினர், 2023-ஆம் ஆண்டு இறுதியில் ‘இளைய தலைமுறையின் புதிய திராவிடம்’ என்கிற தலைப்பில், அந்த மின்னிதழில் வெளியான கட்டுரைகளைப் புத்தகமாகத் தொகுத்து வெளியிட்டனர்.

பல புதியவர்களும் அந்த மின்னிதழில் எழுதியதுடன், திராவிட இயக்க சிந்தனைகளைக் கொண்டு சேர்ப்பதில், புதிய ஊக்கத்தை அந்த மின்னிதழ் அளித்து வந்தது. ‘பணிச்சூழல் காரணமாக அந்த மின்னிதழைத் தொடர முடியாமல் போனது’ என விளக்கம் அளித்துள்ள, அந்தப் பணிகளை ஒருங்கிணைத்த ராஜேந்திரன், தற்போது மீண்டும் மின்னிதழைத் தொடங்க உள்ளதாக அறிவித்துள்ளார்.

“திராவிடத்தைப் பன்னோக்கில் எதிர்க்கும் வல்லூறுகள் அதிகரிக்கும் இக்காலத்தில், இந்த இதழுக்கு சிறிது நேரம் செலவளிப்பதும் அவசியம் எனக் கருதுகிறேன்” என்று பதிவிட்டுள்ள அவர் அந்த மின்னிதழுக்கு கட்டுரைகளை அனுப்பி வைப்பதற்கான DRAVIDAVAASIPPU@GMAIL.COM என்கிற மின்னஞ்சல் முகவரியையும் குறிப்பிட்டுள்ளார்.

அரசியலிலும் பண்பாட்டுச் சூழலிலும் திராவிடத்துக்கு நேரெதிரான போக்குகள் ஒருங்கிணைந்து கொண்டிருக்கும் காலச் சூழலில், திராவிட வாசிப்பைப் பல தளங்களிலும் மேற்கொள்ளப்பட வேண்டியது அவசியமாக உள்ளது. இந்த மின்னிதழ் தொய்வில்லாமல் தொடரட்டும்!

## :ப்ளாஷ்பேக்



### தந்தையுடன் தலைவரைச் சந்தித்த தருணம்!



தி.சிவா

நாகை மாவட்டம், வடக்கு பொய்கைநல்லூர் ஊராட்சியில் கழக பணியாற்றி வந்த என்னுடைய தந்தை சிவ.தியாகராஜன் அவர்கள், 2015-ஆம் ஆண்டு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களைச் சந்திக்க சென்னை, கோபாலபுரம் இல்லம் சென்றபோது என்னையும் அழைத்துச் சென்றிருந்தார். அப்போது தலைவர் கலைஞர் அவர்களிடம் தேர்தல் நிதியாக ரூ.5,000 வழங்கிய, மகிழ்ச்சியோடு புகைப்படம் எடுத்துக் கொண்டோம்!.

**– தி.சிவா,**
**வடக்கு பொய்கை நல்லூர், நாகப்பட்டினம்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033–24473
மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்

### ஐம்பெரும் முழக்கம்!

1970-ஆம் ஆண்டு பிப்ரவரி 3-வது வாரத்தில் திருச்சியில் தி.மு.கழக மாவட்ட மாநாடு நடைபெற்றது. மாநாட்டில், இறுதியாக நிறைவுரையாற்றிய கலைஞர், அண்ணா வழியில் அயராது உழைப்போம், ஆதிக்கமற்ற சமுதாயம் அமைத்தே தீருவோம், இந்தித் திணிப்பை என்றும் எதிர்ப்போம், வன்முறை தவிர்த்து, வறுமையை வெல்வோம், மாநிலத்தில் சுயாட்சி, மத்தியில் கூட்டாட்சி என்ற ஐம்பெரும் முழக்கங்களை முன்வைத்தார். அவ்வைந்தும் கட்சியின் வழிகாட்டு நெறிமுறைகளாகத் தொடரும் என்றும் அறிவித்தார்..

## திராவிடத்தால் வாழ்கிறோம்

722

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131